**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4288/ஆ5/2023, நாள்.12.10.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2019–2020ஆம் ஆண்டிற்கான சட்டப்பேரவை அறிவிப்பு – செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம் – 2023ஆம் ஆண்டுக்கான 'தமிழ் அகராதியியல் நாள்' கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான நடைபெறும் போட்டியில் கலந்துக்கொள்ள – தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (தவ2.2)த் துறை அரசாணை (நிலை) எண். 139, நாள். 05.11.2019
2. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45459/எம்/இ1/2023, நாள். 11.10.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தில் , 2019–2020ஆம் சட்டப்பேரவை அறிவிப்பு மற்றும் பார்வை (1)ல் காணும் அரசாணைக்கிணங்க, செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8 ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது எனவும்,

2023ஆம் ஆண்டுக்கான தமிழ் அகராதியியல் நாள் விழாவையொட்டி, பள்ளி மாணவர்களுக்கு இணையவழியில் மாநில அளவிலான கலைச்சொல்லாக்கப் போட்டியும் , அகராதியியல் தொடர்பான பொருண்மையில் சொல் – பொருள் – படம் என்ற வகையில் ஓவியப் போட்டியும், நடத்தப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்போட்டிக்கள் குறித்து பின்வரும் அறிவுரைகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அனுப்பி வைத்திடவும், மாவட்ட **அளவில் 17.10.2023 அன்று (காலை 9.00 மணி) வேலூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில்** போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்ற மாணவர்கள் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்ப ஏதுவாக **18.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு** மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஓவியப் போட்டி –**

ஓவியப் போட்டி என்பது மாணவர்களிடையே தமிழ்ச் சொற்கள் அறிதலையும் அவற்றிற்கான பொருள் புரிதலையும் ஏற்படுத்தி கொடுக்கப்படும் சொற்களின் பொருளறிந்து அதற்கேற்ற படம் வரைவதன் மூலம் அவர்களின் ஓவியத்திறனையும் ஊக்குவிப்பதாக அமையும்.

(எ–டு) பரி என்று கொடுக்கப்பட்டால் குதிரை என்று பொருளறிந்து படம் வரைய வேண்டும்.

**கலைச்சொல்லாக்கப் போட்டி -**

கலைச்சொல்லாக்கப் போட்டி என்பது, மாணவர்களிடையே ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை வடிவமைக்கும் ஆற்றலை வளர்த்தெடுப்பதாய் அமையும்

(எ-டு)

Laptop – மடிக்கணினி

Website – வலைத்தளம்

மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்கேதுவாக ஒரு போட்டிக்கு ஒருவர் என்ற வகையில் மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்களை மட்டும் தேர்வு செய்து அவர்களின் பெயர் மற்றும் பள்ளி விவரங்களைக் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பி 18.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவலக ஆ5 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாநில அளவில் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதற்பரிசு ரூ. 10,000/- , இரண்டாம் பரிசு ரூ. 5,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விவரங்களுக்கு 044-29520509 என்ற எண்ணிற்கு அலுவலக நேரத்தில் (காலை 10.00 – மாலை 5.30 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

**போட்டிகளுக்கான நெறிமுறைகள் -**

1. இப்போட்டிகளில் அரசுப் பள்ளி (ம) அரசு உதவிபெறும் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்
2. மேற்கண்டுள்ள ஓவியம் மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவர்கள் மாநில அளவில் போட்டி நடைபெறும் 30.10.2023ஆம் நாள் காலை 10.00 மணிக்குள் "நகர் நிருவாக அலுவலக வாளாகம் முதல் தளம் எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை , எம்.ஆர்.சி நகர் , சென்னை – 28 இல் உள்ள செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்த்திற்கு வருகை தர வேண்டும்.
3. ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடங்களிலிருந்து ஓவியப் போட்டிகக்கான வினாக்கள் இடம்பெறும்.
4. படங்கள் வரைவதற்கான வண்ணக்கோல், வண்ணபூச்சு, கரிக்கோல் வரைபடதாள் உள்ளிட்ட இன்னபிற தேவையான ஏந்துகளுடன் வர வேண்டும்.
5. சொல்லாக்கப் போட்டியில், மக்களின் பேச்சு வழக்கு (ம) ஊடகங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலம் /பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் கலைச்சொற்களை வடிவமைக்கும் வகையில் வினாக்கள் அமையும்.

6. இரு போட்டிகளிலும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
7. ஒவ்வோர் போட்டிகளிலும் நடுவர்களின் வகையில் வினாக்கள் அமையும்.
8. ஒவ்வோர் போட்டியிலும் இருவருக்கு மட்டுமே பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசு ரூ. 10,000/- இரண்டாம் பரிசு ரூ. 5,000/- மாநிலப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பெறும்.
9. போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மட்டும் இருவழி அரசு பேருந்து / தொடரிக்கான பயணக் கட்டணம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் வழங்கப்பெறும்

இணைப்பு- படிவம்

2/2 முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

14/10/23

பெறுநர் -
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி /தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
நகல்.

1. சென்னை -6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு / அரசு நிதியுதவி பெறும் தொடக்க / நடுநிலை /
   உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலமாக)
3. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி,
   வேலூர் மாவட்டம்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு
   கேட்டுக்கொள்ளப்படுகிறார். )